மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் சுரங்கப்பாதை அமைக்க வேண்டியதன் அவசியத்தை அரசும் உணர்ந்திருக்கிறது. அதற்காக 20 லட்சம் ரூபாய் செலவு மதிப்பீடு என்று சொல்லப்படுகிறது. ஆனால் சுரங்கப் பாதை அமைக்க மத்திய அரசு 50 சதவீதமும், மாநில அரசு 50 சதவீதமும் நிதி பங்கீடாக இருக்கிறது. இதற்காக மத்திய அரசுக்கு எழுதிக்கேட்டிருக்கிறோம். ஏற்கனவே 1974-ம் ஆண்டி லிருந்து 10 சுரங்கப்பாதைகள் அமைக்க மத்திய அரசு அனு மதித்திருக்கிறது. அந்த வேலைகள் எல்லாம் மேற் கொள்ளப் பட்டு முடிவடைய இருக்கின்றன.

பாய் பின்னும் தொழிலாளர்களுக்கு மானியம்.

* வினா எண் 332—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாய் பின்னும் தொழிலாளர்களுக்கு அரசு மானியம் வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பாய் பின்னும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவிடமிருந்து தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் பாய் நெசவுத்தறிகள் வாங்க ரூ. 75 நிதி உதவி பெறுகிறார்கள். (ரூ. 37.50 மானியம்; ரூ. 30 கடன், ரூ. 7.50 அங்கத்தினர்களின் பங்கு நவீன தறிகள் வாங்க ரூ. 100 (மானியம் ரூ. 50, கடன் ரூ. 50) நிதி உதவி பெறுகிறார்கள்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாய் பின்னும் தொழிலில் ஈடுபட்டவர்கள் சரியாக வியாபாரம் நடக்காத காரணத்தினால் தேக்க நிலை ஏற்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்டவர்களிடம் இருந்து அந்தப் பாய் களை அரசே வாங்கி அவர்களுக்கு உதவி செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, தனிப்பட்ட முறையிலே சிலர் பாய் முடையும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருளை விற்க முடியாமல் சிரமப்படுகிறார்கள் என்பதை அறிந்துதான் எந்தெந்த பகுதியில் மக்கள் அந்தத்

1979 மார்ச் 10]

தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்களோ அங்கே கூட்டுறவு சங்கங்களை நிறுவி, அதன் மூலமாக மூலப் பொருள்கள் வாங்குவதற்கும், தறிகள் வாங்குவதற்கும் கடன் உதவி வழங்கி, அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை இந்த சங்கங்களின் மூலமாகவே வாங்கி விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்தத் தொழிலில் தனிப்பட்ட முறையிலே ஈடுபட்டவர்கள், அந்த சங்கத்திலே உறுப்பினராக சேராதவர்கள் இத்தகைய இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள். அதனால், அங்கே பாய் பின்னும் தொழிலாளர்கள் இருக்கும் இடங்களில் புதிதாக கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க ஆவன செய்யவிருக்கிறோம். என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. தனசேகரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ரூ. 75, ரூ. 100 உதவித் தொகை அளிப்பதாகச் சொன்னார்கள். அது மிகக் குறைந்த தொகையாக இருக்கிறது. அந்தத் தொகையை வைத்து அவர்கள் தறி வாங்குகிறார்களா அல்லது தனியாக வேறு எதற்காகிலும் செலவழித்து விடுகிறார்களா என்பதை ஆராய்ந்து, அப்படி தவறு நடக்குமானால் அரசே அவற்றை ஏற்று தனிக்கூடம் அமைத்துத் தர முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்த நிதி உதவியைப் பெறுகிறவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பெறுகிறார்கள். அவர்கள் அந்த நிதி உதவியைப் பெற வேண்டுமானால் கூட்டுறவுச் சங்கங்களில் அவர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. அந்த கூட்டுறவு சங்கங்களின் மூலமாக அவர்கள் நிதியைப் பெறுகிறபோது அதைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, அந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர்கள் அரிஜனங்களும், மிகவும் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் அவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொடுக்கப்படும் கடன் உதவி போதுமானதாக இல்லாமல் இருப்பதால், அந்த பாய் முடையும் தொழிலில் உள்ள அவர்களுக்கு மேலும் சப்சிடி கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, பாய் முடையும் தொழிலில், என்னுடைய கருத்து சரியாய் இருக்குமானால், பலதரப்பட்ட சமூதாயத்தைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டு இருக்கிறார்கள். உதாரணமாக பத்தமடைப் பகுதியை எடுத்துக் கொண்டால், இந்தியாவிலேயே ஒரு புகழ்

பெற்ற பாய் மூடையும் இடமாக அது இருக்கிறது. அங்கே மூஸ்லீம்கள் அதிகமான அளவில் ஈடுபட்டு இருக்கிறார்கள். பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டு இருக் கிறார்கள். அவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உரிய பாதுகாப்பு கொடுக்க முடியும் என்பதை உணர்ந்து, அந்தச் சங்கங்களை அதிகமாக்க முயற்சி எடுத்துக் கொண்டால், நிதிப் பிரச்சினை பெரிய அளவில் இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, அந்நியச் செலவாணியைக் கவரச் செய்யும் வகையில் பாய் முடையும் பத்தமடையைச் சேர்ந்த தொழிலாளர்கள் நாளுக்கு நாள் நசிந்து வருகிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு மானியம் வழங்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர் களே, பத்தமடையில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக பாய் முடைபவர்களுக்குப் பயிற்சி தரவேண்டும் என்ற அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பயிற்சி அளிக்கும் செலவை வாரியமே ஏற்றுக் கொண்டு இருக்கிறது. அதுமட்டு மல்லாமல், மூலதனக் கடனாக ரூ. 7,500 கொடுத்து, அந்தத் தொழிலை சரியான முறையில் அரசாங்கம் ஊக்குவித்து வரு கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது கூட்டுறவு சங்கங்களில் இல்லாமல் இருப்பவரின் சிரமங்களை கூறியிருப் பார்கள் என்று கருதுகிறேன். அப்படி இருக்குமானால் அவர் களையும் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக ஆக்கி, அவர்களின் சிரமங்களைப் போக்க அரசு தயாராக இருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இந்த பாய் பின்னும் தொழிலில் இருக்கக்கூடியவர்கள் பல்வேறு மதத்தினர் என்றாலும், ஜாதியினர் என்றாலும், அவர்கள் பின்தங்கிய மக்கள் தான், தாழ்த்தப்பட்டவர்கள்தான். அவர் களுக்குக் கடன்கள் கூட்டுறவுத் துறையில் கொடுத்தாலும் அதில் பல சிரமங்கள் இருக்கின்றன. நாம் கைத்தறிக்கு வீவிங் சென்டர் வைத்து இருப்பது போலவே, இந்தத் தொழிலில் இருப்பவர்கள் சரியான முறையில் பாதுகாக்கப் பட பாய் பின்னும் அரசு மையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர் களே, அந்தத் தொழில் ஈடுபட்டு இருப்பவர்கள் பல காலமாக என்ன முறையில் பாய் உற்பத்தி செய்து கொண்டு இருந்தார் களோ அதே முறையைத்தான் இன்னும் பின்பற்றி வருகிறார் கள். எனவே தான் சந்தையில் அந்தப் பாயை விற்பது சிரம மாக இருக்கிறது. நவீன முறையில் நெய்து கொடுத்தால்,

1979 மார்ச் 10]

நல்ல சந்தை கிடைக்கும். பத்தமடை பாய் அனைத்து மாநிலங்களுக்கும் சென்று கொண்டு இருக்கிறது. ஆகவே, அதைப் போலவே நவீன முறையில் பயிற்சி பெற்று, சிறந்த முறையில் பாய் நெய்ய கற்றுக் கொடுத்தால், சந்தை கிடைக்கும். அந்த வகையில் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல், அதை சந்தைக்குக் கொண்டு சென்று விற்றுக் கொடுக்கும் பணியில் இன்னும் போதிய ஆர்வம் அரசு எடுத்துக்கொள்ளும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, பாய் பின்னும் தொழிலுக்கு அரசு மானியம் வழங்க வேண்டும் என்று சொல்கிற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலமாகக் கடன்கள் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இளையான்குடி கூட்டுறவு சங்கத்தில் கிட்டத்தட்ட 3,000 ரூபாய் பணம் கட்டிய பிறகும், இன்றைக்கு $2\frac{1}{2}$ வருஷம் ஆகிறது, தற்போது என்ன பதில் வருகிறது என்றால் கூட்டுறவு சங்கத்தின் பைலா கிடைக்கவில்லை, அதனால் தாமதம் ஆகிறது என்று அரசுத் தரப்பில் இருந்து பதில் வருகிறது. இந்த நிலை சரிதானா என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்த்து, அதைப் போக்க முயற்சி எடுப்பாரா ?

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மூலக் கல்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும் ஒரு முக்கியமான கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள் என்பதால் அதற்கு நான் பதில் சொல்கிறேன். தனிப்பட்ட முறையிலே பாய் முடைகிறவர்கள் பல இடங்களில் சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அவர்கள் பலத்த சுரண்டல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிரமங்களிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற முறையில், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் அரசு கொள்கை ரீதியாக அதை ஏற்று இப்போது செயல்படுத்தி வருகிறது. சில இடங்களில் அரசின் கொள்கையை சரியாக நிறைவேற்ற அங்கே இருக்கிறவர்கள் தயங்கி இருக்கலாம் அல்லது வேறு காரணம் இருக்கலாம். அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், பாய் முடைவோர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.